தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: 10 திகதி: 20/06/2020

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ______________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 10 | |
| வினா 7 | 10 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழ்வரும் பந்தியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழில் முதலாவது நாவலைப் படைத்தவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் ஆவர். இவர் நாவல் ஆசிரியர் மட்டுமன்றி மறுமலர்ச்சிக் கவிஞராகவும், சமூகசீர்திருத்தவாதியாகவும் விளங்கியவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவருக்குச் சிறப்பான இடமுண்டு.

இவர் 1826 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்திலுள்ள குளத்தூரில் பிறந்தார். தனது தந்தையாரிடமே ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். தமிழ், ஆங்கிலக் கல்வியைப் புலவர் தியாகராச பிள்ளையிடம் பயின்றார். சிறுவயதில் இருந்தே எழுதுவதில் ஆர்வமும், ஆற்றலும் கொண்டிருந்தார். விருந்தினர் வருகை, திருமணம் போன்ற நிகழ்வுகளில் நகைச்சுவைக் கவிதைகளையும் படைத்தார்.

இவர் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகவும், பின் பதிவாளராகவும் பணியாற்றினார். மாயூரம் மாவட்ட நீதிபதியாகப் 13 ஆண்டுகள் பணி புரிந்ததால் மாயூரம் வேதநாயகம்பிள்ளை என்றே அழைக்கப்பட்டார். மாயூரம் என்ற ஊர்ப்பெயர் மாயவரம் என்று மருவி, இப்போது மயிலாடுதுறை என அழைக்கப்படுகிறது.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் தமிழின் முதல் புதினமான (நாவல்) "பிரதாபமுதலியார் சரித்திரம்" என்ற நூலை எழுதியதோடு வேறு 15 நூல்களையும் எழுதியுள்ளார். வாழ்க்கை நெறிகள், பொது நீதிகள், பெண்கல்வி, ஒற்றுமை உணர்வு, புதிய சிந்தனைகள், முற்போக்குக் கருத்துக்கள் இவரது கவிதைக்கும், கதைக்கும் கருப்பொருளாக அமைந்தன.

இவரது சமகாலத்து அறிஞர்களான மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ராமலிங்க வள்ளலார், திருவாவடுதுறை மகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோருடன் நல்ல நட்புக் கொண்டிருந்தார். 1805-1861 வரையிலான காலத்தில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகளை மொழிபெயர்த்து "சித்தாந்த சங்கிரகம்" என்ற நூலாக வெளியிட்டார். தீர்ப்புக்களை முதலில் மொழிபெயர்த்த பெருமையும், சட்டவிதிகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் முதலில் வெளியிட்ட பெருமையும் இவருக்குரியது.

அதுமட்டுமல்லாமல் மாயூரத்தில் பெண்கள் மட்டுமே பயிலக்கூடிய தனிப்பாடசாலையைத் தொடங்கினார். இதுவே தமிழ்நாட்டில் பெண்களுக்காகத் தொடங்கப்பட்ட முதற்பள்ளி என்பது குறிப்பிடத்தக்கது..

இவர் இந்துவாக இருந்தாலும் கிறிஸ்தவ மக்களுக்கும் தொண்டாற்றினார். கிறிஸ்தவ வழிபாட்டுப்பாடல்கள் கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இருந்ததால் தமிழ் கிறிஸ்தவர்களுக்காக திருவருள்மாலை,

திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவதோத்திரமாலை, பெரியநாயகி அம்மைப்பதிகம் ஆகிய இலக்கியங்களைப் படைத்தார்.

குழந்தைத்திருமணம், உடன்கட்டை ஏறல் ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தார். நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட வேளை தனது சொத்துக்களையெல்லாம் தானமாகக் கொடுத்தார். சிறந்த சமூக சீர்திருத்தவாதியாக மதிக்கப்பட்டார். தனது 63 வதுவயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

1. "முதலாவது அவரே" என்று சொல்லும் வகையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் ஆற்றிய பணிகள் எவை? (4 புள்ளிகள்)

2. தனது பெயருக்கு முன் "மாயூரம்" என்ற ஊர்ப்பெயரை வைத்து "மாயூரம் வேதநாயகம் பிள்ளை” என ஏன் அழைக்கப்பெற்றார்? (2 புள்ளிகள்)

3. இவரது கதைகளுக்கும், கவிதைகளுக்கும் கருப்பொருளாக எவற்றைக் கொண்டார்? (4 புள்ளிகள்)

4. மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களுடன் நல்ல நட்புக் கொண்டிருந்தவர்கள் யாவர்? (4 புள்ளிகள்)

5. இவர் படைத்த கிறிஸ்தவ இலக்கியங்கள் எவை? (5 புள்ளிகள்)

6. மாயூரம் வேதநாயகம்பிள்ளை சமூக அக்கறையுடையவர் என்பதை நிரூபித்துக் காட்டுக. பந்தியை ஆதாரமாக வைத்து எழுதுக. (6 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**கீழ்வரும் கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழன் என்ற பெருமையோடு
தலை நிமிர்ந்து நில்லடா!
தரணி எங்கும் இணையிலா உன்
சரிதை கொண்டு செல்லடா!
அமிழ்தம் என்ற தமிழின் ஓசை
அண்ட முட்ட உலகெலாம்
அகில தேச மக்களும் கண்டு
ஆசை கொள்ளச் செய்து, மேல்
கமழ் மணத்தின் தமிழில் மற்ற
நாட்டி லுள்ள கலையெலாம்
கட்டி வந்து தமிழர் வீட்டில்
கதவு இடித்துக் கொட்டியே
நமது சொந்தம் இந்த நாடு
நானி லத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்து வாழ்க நீண்டநாள்.

(நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை)

1. இப்பாடலில் கவிஞர் எப்படி நிற்கச் சொல்கிறார்? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

2. உலகெங்கும் எதைக் கொண்டு செல்லக் கட்டளை இடுகிறார்? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

3. கவிதையின் பின் அரைப்பகுதியில் உமக்குக் கவிஞர் கூறுகின்ற வேலை என்ன? (5 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

## கடிதம் எழுதுதல்

தாய் நாட்டிலுள்ள (இலங்கை/இந்தியா) உமது மாமா, மாமி அவர்களுக்குத் தற்போது கொரோனா காரணமாக (கொவிட்-19) நீர் பாடசாலைக்குச் செல்லமுடியாதிருந்த வேளை இணையவழியில் தொழில்நுட்பத்தின் உதவியுடன் உமது வகுப்புகள் நடைபெற்றது என்பதைக் கூறி அவ்வாறு நடைபெற்ற வகுப்புகள் எப்படி இருந்தது? உமக்கு விருப்பமாக இருந்ததா? கற்றல் இலகுவானதா? என்பவற்றை விளக்கி 80 - 100 சொற்களில் கடிதம் எழுதுக.

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

**பின்வருவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 175-200 சொற்களுக்கு அமைவாக எழுதுக.**

1. எமது தமிழ் கல்வி நிலையத்தின் 33 வது வருடாந்தக் கலைவிழா

2. "எமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் பெருமை" என்ற தலைப்பில் உமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் நீர் ஆற்றவுள்ள பேச்சை எழுதுக

3. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உண்டான காட்டுத்தீ ஏற்படுத்திய அழிவுகள் - உயிர்கள், உடைமைகள், வளங்கள் அழிவுபற்றியும், அது பற்றிய உமது அபிப்பிராயங்களையும் கட்டுரையாக எழுதுக

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்டுள்ள குறிப்புக்களைக் கொண்டு சில பந்திகள் எழுதுக.**

- மே 22 ஆம் திகதி உயிர் வாழ்வனவுக்கான சர்வதேசதினம்.
- ஐ. நா. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இத்தினம்.
- நோக்கம் :
  - உயிர்ப்பல்வகைமை பற்றி ஆராய்தல்.
  - அவை எதிர்கொள்ளும் சவால்கள் அறிதல்.
  - இவற்றைக் கவனத்தில் கொண்டு ஆய்வு செய்தல், விளக்கல்.
- உயிரினங்களின் அழிவுக்குக் காரணங்கள் :
  - காலநிலை மாற்றம். வெப்பம் அதிகரித்தல்.
  - வாயு மண்டலம் பாதிக்கப்படல். அதனால் நிலவளம், நீர்வளம், உயிர்வளம் பாதிப்புக்குள்ளாதல்.
  - காட்டுத்தீ அதிகரிப்பதால் உயிரினங்கள் அழிவு.
- இந்த அழிவை எப்படிக் கட்டுப்படுத்தலாம் :
  - பூமி வெப்பமயமாதலைத் தடுத்தல்.
  - வளிமண்டலத்தைப் பாதுகாத்தல்.
  - மீதேன் வாயுக் கசிவுகள் ஏற்படாது பார்த்தல்.
  - நிலக்கரி, இயற்கைவாயு, எரிசக்திப் புகைகளைக் கட்டுப்படுத்தல்
  - காலம் காலமாகப் பூமியில் வாழ்ந்து வரும் உயிரினங்களைப் பேண வழிகாணல்.

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தலும் விடையளித்தலும்.**

| வினா | இங்கே குறிப்புகள் எடுக்க |
|---|---|
| 1. இங்கே குறிப்பிடப்பட்ட வானொலி எது? என்ன நிகழ்ச்சி கேட்டீர்கள்? (2 புள்ளி) | |
| 2. அந்த நிகழ்ச்சியில் தொலைபேசிமூலம் இணைந்த நேயர் யார்? அவர் எங்கேயிருந்து பேசினார்? (1 புள்ளி) | |
| 3. அந்த நேயர் விரும்பிக் கேட்ட பாடல் எது? எதற்காக அந்தப்பாடலை விரும்புவதாகக் கூறினார்? (3 புள்ளி) | |
| 4. அதே பாடலை விரும்பிக்கேட்டவர்கள் யார்? எங்கேயிருந்து கேட்டார்கள்? (2 புள்ளி) | |

5. அவர்கள் அந்தப்பாடலை விரும்பக் காரணம் என்னவென்று கேட்டீர்? (2 புள்ளி)

| வினா இல | 7 | புள்ளிகள் | 10 | பக்கம் | 14 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தலும் விடையளித்தலும்.**

| வினா | இங்கே குறிப்புகள் எடுக்க |
|---|---|
| 1. நீங்கள் கேட்ட அறிவித்தலை விளம்பரப்படுத்திய நிறுவனம் எது? (1 புள்ளி)<br>__________<br>__________ | |
| 2. தங்கநகை வியாபாரத்தில் இவர்கள் எத்தனை வருட அனுபவமுடையவர்கள்? (1 புள்ளி)<br>__________<br>__________ | |
| 3. தற்போது அவர்கள் புதிதாக அறிமுகப் படுத்தியுள்ள சேமிப்புத்திட்டம் என்ன? (2 புள்ளி)<br>__________<br>__________ | |
| 4. இத்திட்டம் வாடிக்கையாளர்களுக்கு என்னென்ன நன்மைகளை அளிக்கும் என அறிந்தீர்? (3 புள்ளி)<br>__________<br>__________<br>__________<br>__________ | |
| 5. இத்திட்டத்திலுள்ள பாதுகாப்பு என்ன? (2 புள்ளி)<br>__________<br>__________<br>__________<br>__________ | |

6. தங்கத்தின் விலை கடந்த 30 ஆண்டுகளில் எத்தனை மடங்காக அதிகரித்துள்ளதெனக் கேட்டீர்? (1 புள்ளி)